

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா அறிவகம் மாவட்ட கணினி மைய அறையை (District War Room) மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்கள் அ.தமிழ்மாறன், நவீன், பகுதி செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், வே. கருணாநிதி, த.ஜெயகுமார், மாவட்ட அமைப்பாளர் வி.ரவிச்சந்திரன் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயம், பேராசிரியர் கூட்டரங்கில் நாமக்கல் ஒன்றியத்தில் மறைந்த 69 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தினருக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கும் நிகழ்ச்சியில், மா.சுப்ரமணியன் மறைந்த 69 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தினருக்கு நிதியை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் து.கலாநிதி, மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஏகாம்பரநாதர் திருக்கோயில் சார்பில்

# கீழ்ப்பாக்கத்தில் புதிய செவிலியர் கல்லூரி அமைக்கப்படும் இடம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, நவ.6-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (05.11.2025) சென்னை, கீழ்பாக்கத்தில் 2025-2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயில் சார்பில் தொடங்கப்படவுள்ள புதிய செவிலியர் கல்லூரி அமையவுள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஏற்பட்ட பிறகு இந்து சமய அறநிலையத்துறை அறம் சார்ந்த துறை என்பதால் பக்தர்களுக்கு மட்டுமல்லாமல், பொருளாதாரத்தின் பின் தங்கிய மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவிடும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடத்தப்படும் 25 பள்ளிகள் மற்றும் 10 கல்லூரிகளில் 22,807 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். திராவிட மாடல் ஆட்சியில் பழனி திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டு மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய துறையாக திகழ்கிறது. அதேபோல் விடுதியில் தங்கி பயிலும் மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லாமல் மூன்று வேளையும் உணவு வழங்கும் திட்டத்தை விரைவில் தொடங்க உள்ளோம்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு திருக்கோயில்கள் சார்பில் 4 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. கடந்த நான்கரை ஆண்டு கால ஆட்சியில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு ரூ.138 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், ஆய்வகங்கள், நூலகங்கள், கலையரங்கங்கள், விளையாட்டு மைதானம் மேம்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு இணையாக துறை சார்பில் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களை உருவாக்கி வருகின்றோம். அதற்கு எடுத்துக்காட்டாக காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி திகழ்கிறது.

2025-2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில் சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில்கள் சார்பில் செவிலியர் கல்லூரிகளும், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் சார்பில் கோயில் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியும், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் புதிய பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றும் தொடங்கப்படும் என அறிவித்திருந்தோம். இவற்றை செயல்படுத்திடும் வகையில் ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமாக சென்னை, கீழ்ப்பாக்கத்தில் அமைந்துள்ள 7.68 ஏக்கர் நிலப்பரப்பில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியானது 2.77 ஏக்கர் பரப்பிலும், வணிக கட்டிடங்கள் 0.42 ஏக்கர் பரப்பிலும் அமைந்துள்ளது. மீதமுள்ள 4.49 ஏக்கரானது காலி மனையாக உள்ளது. எவ்வித பயன்பாடும் இல்லாமல் உள்ள இந்த காலி இடத்தை பயனுள்ளதாக மாற்றும் வகையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் கல்வி பயிலும் வகையில் செவிலியர் கல்லூரி தொடங்கிட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் பழைய கட்டிடத்தில் செவிலியர் கல்லூரியை தற்காலிகமாக தொடங்கி 100 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளோம். 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இக்கல்லூரியை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தொடங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளும் வகையில் வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் துணைத்தலைவராக பணியாற்றி ஓய்வுபெற்ற டாக்டர். நாராயணபாபு அவர்களை பொறுப்பு அலுவலராக நியமித்துள்ளோம்.

காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு வருகின்ற டிசம்பர் 8ஆம் தேதி குடமுழுக்கு நடத்தப்படும். அதற்குள் திருக்கோயிலை சார்ந்த அனைத்து பணிகளும் நிறைவு பெற்றுவிடும். திருக்கோயிலுக்கு பின்புறம் உள்ள கல்கார மண்டபம் போன்ற மண்டபங்களின் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலிருந்து தனியாரிடமிருந்த திருக்கோயில்கள் எந்த நோக்கத்துடன் இந்த சமய அறநிலையத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டதோ, அதன்படியே செயல்பட்டு வருகிறது. எந்த ஒரு தனியார் கோயில்களிலும் சிறந்த முறையில் நிர்வாகம் நடந்தால் அதில் இந்து சமய அறநிலையத்துறை தலையிடாது. தவறுகள் ஏதேனும் நடக்கின்ற பட்சத்தில் புகார்கள் வருகின்றபோது அதை விசாரிக்கின்ற பொறுப்பு துறைக்கு இருக்கின்றது. அப்படி விசாரணையில் தவறு நடப்பது நிரூபிக்கப்படுகின்ற போது நிச்சயமாக துறையின் சட்ட திட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே மடியிலே கனமில்லை என்றால் பதற வேண்டிய அவசியம் அன்பு அண்ணன் நயினார் நாகேந்திரனுக்கு இல்லை.

முதலமைச்சர் அவர்களின் உறுதியான நடவடிக்கைகள், மக்கள் மேம்பாட்டிற்காக அவர் மேற்கொள்கின்ற பணிகள், அதற்கான அவர் மேற்கொள்கின்ற சிரமங்கள், எதிர்த்து நிற்க வேண்டிய பொருளாதார சூழ்நிலைகள், ஒன்றிய அரசின் வஞ்சனை ஒருபுறம். மறுபுறம் தமிழகத்தில் இருக்கின்ற அரசியல் கட்சிகள் நல்லவை எவற்றிற்கும் துணை வராமல் அல்லவைகளையே வாரி தூற்றுகின்ற ஒரு நிலை. இவற்றையெல்லாம் புரிந்து கொண்ட, உண்மையாக மக்கள் நலனில் அக்கறை கொண்ட பல்வேறு நல்ல உள்ளங்கள் இந்த இயக்கத்தை நோக்கி வரத்தான் செய்வார்கள். திராவிட மாடல் ஆட்சியின் நாயகனின் அன்பு கரங்கள் மேலும் 2026 ஆம் ஆண்டிற்குள் வலுப்பெறும். சட்டமன்ற தேர்தலில் உறுதியாக வெல்வோம். 200 என்ற வரலாற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் படைத்துக் காட்டுவார்.

அண்ணா திமுகவின் தற்காலிக பொதுச்செயலாளராக இருப்பவர் எப்போது ஒழிவார் என்று தான் அண்ணா திமுக தொண்டர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதை நாங்கள் கண்கூடாக பார்க்கிறோம்.

கோவை பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் குற்றமிழைத்த 3 நபர்களை 48 மணி நேரத்தில் தப்பி ஓட நினைத்தவர்களை சுட்டு பிடித்து அவர்களை கைது செய்த ஆட்சி இந்த ஆட்சி. குற்றவாளிகளை கண்டுபிடிக்காத போதும், பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்காத போதும் சட்ட ஒழுங்கு கெடுகிறது என்று சொல்லலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வழக்கில் குற்றவாளிகள் மீது 30 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் வழக்கு நடத்தி உரிய தண்டனை விரைவில் பெற்று தரப்படும் என்று உறுதியாக கூறியிருக்கின்றார். ஒரு அரசாங்கம் எப்படி விரைவாக செயல்பட முடியும் என்பதற்கு சட்டம் ஒழுங்கு காப்பாற்றுகின்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு சாட்சியாகும்.

எதிர்கட்சிகளின் நோக்கமே குற்றச்சாட்டுகளை சொல்வது தான். ஆட்சியிலே இருக்கின்ற போது ஆங்காங்கே நடைபெறுகின்ற தவறுகளுக்கு நடவடிக்கை இல்லை என்றால் தான் பொறுப்பேற்க முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தளவில் சட்டம் ஒழுங்கோ, மக்களை சீரழிக்கின்ற எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் அதை இரும்பு கரம் கொண்டு அடக்கி, துரித நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார். குற்றம் நடப்பதற்கு முன்பு தடுப்பது ஒருபுறம் என்றாலும், குற்றம் நடந்த பிறகு அதற்குண்டான நடவடிக்கை எடுப்பது மற்றொன்றாகும். இந்த இரண்டையும் இந்த அரசு செவ்வனே ரயில் ஓடுகின்ற இரட்டை தண்டவாளங்களை போல் பின்பற்றிக் கொண்டிருக்கின்றது.

எந்த சூழல் வந்தாலும் அதை எதிர்கொள்கின்ற ஆற்றல் படைத்த சிப்பாய்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கின்றார். எல்லா இடத்திலேயும் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு பயிற்சி அளிக்கின்ற பணிகளை நிறைவாக செய்து வருவது திராவிட முன்னேற்ற கழகம் மட்டும்தான். இந்த இயக்கம் மக்களை நம்பி இருக்கின்ற இயக்கம், மக்களோடு பயணிக்கின்ற இயக்கமாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்க்கதரிசியான அரசியல் வாதி, தொலைநோக்கு பார்வை கொண்டவர். ஆகவே எத்தகைய சூழல் வந்தாலும் அதை சமாளிக்கின்ற ஆற்றலை அவர் இயக்க தோழர்களுக்கு பயிற்சி அளித்து இருக்கின்றார்.

சபரிமலைக்கும் செல்லும் பக்தர்களுக்கு திருவாங்கூர் தேவஸ்தானம் எங்களிடம் 25 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகளை கோரி இருக்கின்றார்கள். அதை ஏற்பாடு செய்து, முதற்கட்டமாக நவம்பர் 14ம் தேதி பிஸ்கட் பாக்கெட்டுகளை அனுப்ப உள்ளோம். பக்தர்களுக்கு 24 மணிநேரமும் உதவிடும் வகையில் சபரிமலையில் ஒரு அலுவலகத்தை ஏற்படுத்த உள்ளோம். மேலும் அப்பல்லோ, காவேரி, இராமச்சந்திரா மருத்துவமனைகள் மூலம் அனைத்து வசதிகளுடன் கூடிய தற்காலிக மருத்துவ மையத்தை ஏற்படுத்துவதற்கு தேவஸ்தானத்திடம் அனுமதி கோரியுள்ளோம். அனுமதி கிடைக்கும் நிலையில் போதிய மருத்துவர்களோடு தற்காலிக மருத்துவ மையம் அமைக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக பக்தர்களுக்கு என்னவெல்லாம் உதவிகள் செய்ய முடியுமோ அதையெல்லாம் ஏற்பாடு செய்து தர உத்தரவிட்டுள்ளார். சபரிமலைக்கு செல்லும் பக்தர்களுக்காக சிறப்பு பேருந்துகளை இயக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்னக இரயில்வே சிறப்பு இரயில்களை இயக்குவதாக அறிவித்துள்ளது. ஆகவே தமிழக பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் முடிந்த அளவிற்கு கேரளாவில் அரசின் துணையோடு தமிழக அரசு மேற்கொள்ளும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர் சி.குமாரதுரை, உதவி ஆணையர். ஆர். கார்த்திகேயன், செவிலியர் கல்லூரி பொறுப்பு அலுவலர் டாக்டர்.நாராயணபாபு, செயற்பொறியாளர் சந்திரசேகர், திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி முத்துலட்சுமி, பள்ளிமுதல்வர் ஜெயந்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தாம்பரம் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் அகரம்தென் ஊராட்சியில் மாநகர செயலாளர், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ ரூ.1.கோடியே 15.இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாயுடன் புதிய சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார். உடன் ஊராட்சி மன்ற தலைவர் சி.கே.ஜெகதீஸ்வரன், துணை தலைவர் அரவிந்த் மனோகரன், மன்ற உறுப்பினர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## படப்பை ஆ.மனோகரன் - சீ.பத்மபிரியா பங்கேற்பு! ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், நவ.6-

குன்றத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ. வந்தே மாதரம் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய திமு கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (6.11.2025 - வியாழக்கிழமை) மாலை 05.00 மணியளவில் பெரியபணிச்சேரி கோவிந்தராஜ் திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக அவைத் தலைவர் து. சுந்தர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றிட உள்ளார்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் சீ. பத்மப்ரியா, குன்றத்தூர் ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஒன்றிய குழு துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் இ.மணி, தலைமை பொதுக் குழு உறுப்பினர் கே.எத்திராஜ், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ள இருப்பதால் ஒன்றிய கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கிளை கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி இமுகவர்கள் BDA, பாக இளைஞரணி அமைப்பாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள். : SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் செய்யும் பணிகள் குறித்து. என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பணி குறித்து. நவம்பர் 27 துணை முதல்வர் பிறந்தநாள் விழா. 2026 சட்டமன்ற தேர்தல் பணி. கழக வளர்ச்சி

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கோத்தகிரி – செம்மனாரை

# ஆதிவாசி பள்ளிக் குழந்தைகள் - பொதுமக்களின் நலன் கருதி கூடுதல் பேருந்து வசதி!

## தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

நீலகிரி, நவ.6-

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டம் செம்மனாரை ஆதிவாசி கிராம பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான கூடுதல் பேருந்து நீட்டிப்பு வசதி வேண்டி கடந்த (1.11.2025) அன்று குஞ்சப்பணை ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் செம்மனாரை கிராம மக்களின் சார்பாக அளிக்கப்பட்ட மனுவை ஏற்று முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர் நலன் கருதி புதிய மலைப்பகுதி வழித்தட பேருந்து நீட்டிப்பிற்காக தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நேற்று (5.11.2025) புதிய வழித்தட பேருந்து வசதியை கொடி அசைத்து துவக்கி வைத்தார்.




முன்னதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் எம்.ஜி.ஜெய்சங்கர் அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக நீலகிரி மாவட்ட அவை தலைவர் போஜன்,கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன்,கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கிளை மேலாளர் (வணிகம்) ஞானப்பிரகாசம் மற்றும் தொ.மு.ச நீலகிரி மண்டல செயலாளர் நெடுஞ்செழியன், தொமுச நீலகிரி மண்டல பொருளாளர் ஆனந்தன், கோத்தகிரி கிளை நிர்வாகிகள் சின்னான், ரத்தினகுமார், ஸ்டீபன், ஷியாம், சத்யராஜ் கணேசன், முன்னாள் கவுன்சிலர் சேகர் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக வணிக மேலாளர் எஸ்.பாஸ்கர் நன்றியுரை கூறினார்.

### எழும்பூர் தொகுதி:

# வார்டு எண்.77 மற்றும் 99இல் நடைபெறும் பணிகள்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஆய்வு!

சென்னை, நவ.6-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.77 மற்றும் 99க்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.



வார்டு எண்.99, புரசைவாக்கம், பொன்னப்பா தெருவில் அடிக்கடி கழிவு நீர் அடைப்பு ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் அளித்த புகாரையடுத்து, அத்தெருவில் ஏற்கெனவே இருந்து வரும் கழிவு நீர்க் குழாய்களை அகற்றி விட்டு, புதிய பெரிய விட்டம் கொண்ட கழிவுநீர்க் குழாய்களைப் பதிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும்;

வார்டு எண்.77, புளியந்தோப்பு, டிமலஸ் சாலை பகுதியில் உள்ள முனுசாமி கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணி குறித்தும்;

வார்டு எண்.77, புளியந்தோப்பு, முனுசாமி தெரு, அய்யாவு தெரு மற்றும் ருத்ரப்பா தெரு ஆகிய தெருக்களில் குடிநீர்க் குழாய்களை இணைக்கும் பணிகள் முடிவுற்றிருப்பதையும்;

வார்டு எண்.77, டிமலஸ் சாலை பகுதியில் கழிவுநீர்க் குழாய் இணைக்கும் பணி முடிவுறும் கட்டத்தை எட்டியிருப்பதையும்;

வார்டு எண்.77, கே.பி. பார்க் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் பழுதடைந்த மின்தூக்கிகளைச் சீர் செய்யும் பணி மற்றும் அவ்வளாகத்தில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றும் பணி ஆகியவற்றைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் ஆய்வு செய்து, இப்பணிகளை விரைந்து முடிக்குமாறு துறை சார்ந்த அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலர்கள் உடனிருந்தனர்.

முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருசோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், காந்தி; 77 ‘அ’ வட்டத் துணைச் செயலாளர் ஆர். ஆரோக்கியம், அவைத் தலைவர் விசுவநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் சுகுமாறன், 77வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சூர்யா, சதிஷ்குமார்; சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜான்சி ராணி, சரவணன், கோமகன், தேவநிதி உள்ளட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் இவ்வாய்வில் கலந்து கொண்டனர்.